திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மழை காலங்களில் வயல்களில் நீர் நிறைந்து விடுவதால், விவசாயம், பாதிக்கப்படுகிறது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் வசதிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திருச்செந்தூர் ஆவுடையார்குளம் ஆக்கிரமிப்பு

* வினா எண். 16 —திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் ஆவுடையார்குளத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது?

(இ) ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.—

(அ) ஆம்.

(ஆ) 3·68 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது.

(இ) ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற மாவட்ட ஆட்சியர் சட்டப்படியான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையார்குளத்தில் மட்டும் ஆக்கிரமிப்பு இல்லை, தமிழகத்தில் எல்லா இடங்களிலும் இந்த ஆக்கிரமிப்பு இருக்கிறது. நீர்த் தேக்கக் குளங்களில் ஆக்கிரமிப்பு இருப்பதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதனால் விவசாயிகளும் நஷ்டத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, நீர்த்தேக்கக் குளங்களில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றப் பொதுப் பணித் துறை மூலம் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பாசனக் குளங்களில் நிலம் இல்லாத விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், பாசனம் ஒழுங்காகச் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதைத் தடுக்க ஏற்கனவே பல அரசுகள் இருந்த நேரத்திலும், அரசின் மூலமாக பல நடவடிக்கைகள் எடுத்தும்கூட, ஆக்கிரமிப்புகள் அப்படியே இருக்கின்றன. நிலச்சட்டம் 6–ஏ பிரிவின்படி சட்டப்படியான

[1980 பிப்ரவரி 2]

நடவடிக்கையை அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது. முடிந்த அளவிற்கு காரியங்கள் முடிந்து கொண்டு இருக்கின்றன. அதே நேரத்தில், இந்த அவையின் மூலமாக உங்களின் மூலமாக நான் வேண்டுகோள் விடுப்பது, விவசாயிகள் எந்தெந்தப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களோ, அவர்கள் அந்த ஆக்கிரமிப்புகளில் இருந்து அகற்றப்பட்டால் தான் பாசன வசதியை ஒழுங்காகச் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மானாமதுரை கூட்டுறவுப் பால் உற்பத்திச் சங்கம்.

*வினா எண் 17 திரு. வ.மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மானாமதுரையிலுள்ள கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கம் நிர்வாகச் சீர்கேடு அடைந்திருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) மானாமதுரையிலுள்ள கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கத்தில் நிர்வாகச் சீர்கேடு ஏற்பட்டிருப்பதாக பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) சங்க நிர்வாகச் சீர்கேடுகளுக்குக் காரணமாக சங்க இயக்குநர்கள் மிது தமிழ்நாடு கூட்டுறவுச்சங்க 1961, சட்டப்பிரிவு 72–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சங்க நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு ஒரு தனி அலுவலர் நியமிக்கப் பட்டுள்ளார்.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் சீர்கேடு இருந்ததால் கலைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அவர்கள் செய்த தவறுகளை விரிவாக அறிய நான் விரும்புகிறேன். அவர்கள் செய்த தவறுகளுக்கு எந்தவகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது? சிவில், கிரிமினல் நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க 1961–சட்டப்பிரிவு 72–ன் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று பதில் சொல்லி இருக்கிறேன். இங்கே மிக முக்கியமாக சங்கத்தின்